www.tamilarangam.net

# "தீர விசாரித்து தண்டனை வழங்குங்கள்"

கப்ரன். தோழர் றேகன் பிராந்தியத் தளபதி (வன்னி)



## போராளிகள் பலியெடுக்கப்படுவதை அனுமதிக்கிறீர்களா?

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



★ ★ ★ ★ ★ ★

# “தீர விசாரித்து தண்டனை வழங்குங்கள்”

## (மனித மனச்சாட்சியை உலுப்பும் இந்த வாசகம் தோழர் றேகன் வேட்டுக்கள் தீருமுன் கொலைகாரரிடம் விடுத்த கடைசி வேண்டுகோள்.)

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய எமது வன்னிப்பிராந்திய தளபதி **தோழர் றேகன்** தமிழீழப் புலிகளால் திட்டமிட்ட முறையில் படுகொலை செய்யப்பட்டார். இக்கோர நிகழ்விற்கு நியாயம் கற்பித்து புலிகளின் அரசியல் குழு (1-12-85) இல் ''மக்களோடு இணைந்து மக்களுக்காகப் போராடுவோம்'' என ஒரு மக்கள் பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறது.

அப்பிரசுரம் படாதபாடுபட்டு சொல்லி முடித்தவற்றின் சாராம்சம்:

- வவுனியா — உதயா அரிசி ஆலை முதலாளியிடம் நாம் வற்புறுத்தி உதவி கோரினோம்.
- இதில் எழுந்த தகராறில் புலிகள் சமாதானப்பிரியர்களாக நடந்து கொண்டனர்.
- ஆனால் நாமோ புலிகளுக்கு சவாலாக ஆலை உரிமையாளரையும்; மகனையும் கொன்று விட்டோம்.
- பொங்கி எழுந்து மக்கள் புலிகளிடம் நீதி கேட்டதை சிரமேற்கொண்டு அவர்கள் இக் கொலைக்கு மூலகாரணமாக இருந்ததாக தமது விசாரணையின் மூலம் கண்டு பிடித்த **தோழர் றேகனை** கொன்று தீர்த்தனர்.
- இதன் மூலம் ''தர்மத்தை ஈழமண்ணில் நிலைநாட்டிய தார்மீக புருஷர்களாகவும், புரட்சி வாதிகளாகவும் ஆகி விட்டோம், பெருமையடைகின்றோம்'' என்பவைதான்.

அரிசி ஆலை முதலாளியின் மகன் எமது ஸ்தாபனத்தில் பயிற்சி பெற்றவர் அவரின் ஆலோசனையின் பேரில் அவரது தந்தையாரிடம் உதவி கோரினோம். வவுனியாவில் உள்ள அகதிகள் முகாமில் வாழும் மக்களின் அடிப்படையான உணவுப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக இவ்வுதவியை நாம் உபயோகித்தோம். அகதிகள் முகாமிற்கு நாம் உதவியதை **தோழர் றேகனின்** அஞ்சலி உரையில் வவுனியாக் குடிமகன் ஒருவர் குறிப்பிட்டுப் பேசியதை இங்கு நினைவுபடுத்துகிறோம். இதன் காரணத்தால் ஆலை முதலாளி எமக்கு உதவி வழங்கினார்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதைக்கண்டு பொறுக்காத புலிகள் மேற்கொண்டு உதவக்கூடாது எனக் கட்டளையிட்டு பிரச்சனைவரின் தாம் பாதுகாப்பளிப்பதாக கப்பம் வாங்கினர். முதலாளியின் மரணச் சடங்கில் அவரது மனைவி, "50ஆயிரம் ரூபாவும் 2 மூடை அரிசியும் வாங்கி பாதுகாப்பளிப்பதாக சொன்னீர்களே" என புலிகளை பார்த்துக்கேட்டார். இப்பின்னணியில் மீண்டும் உதவிகோரிச்சென்ற எமது தோழர்களை முதலாளியின் கையாட்களுடன் புலிகளும் கை கோர்த்து நையப்புடைத்தனர். இது நடந்தது 16-10-85 அன்று.

இதன்பின் புலிகள்; தாம் கொள்ளையரை விரட்டியடித்து விட்டதாக வவுனியா மக்களிடையே தம்பட்டம் அடித்து திரிந்ததை விசாரித்து தெளிவு படுத்தும் பொருட்டு உதயா அரிசி ஆலைக்கு எமது தோழர்கள் 16-11-85 அன்று சென்றனர்.

அப்போது; சமாதானப்பிரியர்களாகத் தம்மைக் காட்டிக் கொள்ளும் இந்தப் புலிகள், முதலாளியையும், கையாட்களையும் தூண்டி விட்டு தாமும் அவர்களுடன் கூட்டுச்சேர்ந்து கத்திகள், பொல்லுகள், கம்பிச்சுருள்களால் எமது தோழர்களைத் தாக்கினர் காயம் விளைவித்தனர். வாகனத்தைச் சேதப்படுத்தினர். இப்பதற்றமான சூழ்நிலையில் தோழர்களின் கையில் இருந்த ஆயுதத்தை பறிக்க முயன்ற முதலாளியும் அவரது மகனும் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகினர். ஸ்தலத்தில் ஒருவரும் பின்னர் ஒருவருமாக மரணமடைந்தனர்.

இம்மரணத்தை நாம் பொறுப்பேற்கிறோம் துரதிஷ்டவசமாக நேர்ந்த இச்சம்பவத்தில் புலிகள் வகித்த பாத்திரமும் இம்மரணத்திற்கான காரணமென்பதை வலியுறுத்துகிறோம்.

இதன்பின் 'பொது மக்கள்' எனும் போர்வையில் வெளிவந்த துண்டுப் பிரசுரங்களும் இராணுவத்தின் பூரண ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட 'கதவடைப்பும்' இதன் பின்னணியில் இருந்த புலிகளும், வவுனியா மக்களால் நிராகரிக்கப்பட்டமைக்கு பின்னர் நடந்த **தோழர் ரேகனின்** மரண ஊர்வலம், ஹர்த்தால், அஞ்சலிக் கூட்டங்கள் போன்ற சம்பவங்கள் சான்று பகரும். இயக்கங்களிடையேயான துப்பாக்கிச் சமர், பலப்பரீட்சை மக்கள் மத்தியில் வெறுப்புணர்வையும், விரக்தியையும் ஏற்படுத்தும் என்ற பொறுப்புணர்வின் பேரால் கடைசிக் கணம்வரைக்கும் துப்பாக்கிகளை இயக்க வேண்டாம் என **தோழர் ரேகன் மக்கள் விடுதலைப் படையின் (PLA)** உறுப்பினர்களுக்கு கட்டளை பிறப்பித்திருந்தார். புலிகளின் ஆயுத வெறித்தனத்தால் எமது தோழர்கள் நடமாட்டத்தை தவிர்த்திருந்த வேளையிலும் எமது ஆதரவாளர்களைத் தாக்கி வீடு வீடாகச்சென்று முதலாளித்துவக் கூலிப்படையான ஸ்ரீ லங்கா இராணுவத்தினரைப் போன்று மக்களை மிரட்டி எமது தோழர்களை கைது செய்தனர்.

இவர்கள் தமது வெறித்தனத்திற்கு **தோழர் ரேகனைப்** பலியெடுத்துக் கொண்டனர். சாதாரண வறிய விவசாய குடும்பத்தில் பிறந்து, தமக்குக் கிடைத்த பல்கலைக்கழக அனுமதியைப் புறக்கணித்து, மக்கள் மத்தியில் அரசியல் வேலையில் ஈடுபட்டு, மக்கள் விடுதலைப் படையில் உறுப்பினராகி, சர்வதேச புரட்சிகர முன்னணி ஒன்றின் போர்முனைப் பாசறையில் பயிற்சி பெற்று, வன்னிப் பிராந்தியத் தளபதியாக நியமிக்கப்பட்ட தோழனை, பிடித்த ஆடுகளில் கொழுத்த ஆடாகத் தெரிவு செய்து கொன்று, தின்று தீர்த்தன புலிகள். **தோழர் ரேகன்** வன்னிப் பிராந்தியத்தில் தமக்கு சாவாலாக இருப்பான். இவனை அழிப்பதன் மூலம் வன்னி மண்ணில் E.P.R.L.F ஐ அழித்து விடலாம் எனக்கருதிய புலிகள் அவனைப் பலியெடுத்தன இக்கொலை வெறியை மறைக்க 'சதி ஆலோசனைக் கூட்டம்' 'விசாரணை' 'மூலகாரணம்' என்றெல்லாம் கதையளக்கிறார்கள். நியாயம் கற்பிக்கிறார்கள்.

இயக்கக் கட்டுப்பாட்டை மீறியதால்—**தோழர் சுந்தரம்.**

சமூக விரோதி என்பதால்—**தோழர் தேவன்.**

தற்செயலாகச் சுட்டதால்—**தோழர் ஜெகன்.**

உரிமை கோரத் திராணியின்மையால் வஞ்சகத்தனமாக—**தோழர் மனோமாஸ்டர்.**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செம்மணியில், காக்கைதீவில், முகாம்களின் புதைகுழிக்குள் வெளிவிடாமல் கருக்கப்பட்ட, மறைக்கப்பட்ட பலர்......பற்பலர்.

வெட்கக்கேடான இரத்தக்கறை படிந்த கொலைக்கரங்கள் தோழர் ரேகனின் படுகொலையை தர்மம் என்றும், புரட்சி என்றும், பெருமைப்படத் தக்கதென்றும் பீத்திக்கொள்கின்றனர். மனித நாகரீகமும, போராட்டப் பண்புகளும் காறி உமிழ்கின்றது இந்தக் கொலை வெறியர்களை.

மக்கள் கொதித்தெழுந்தார்களாம், இந்தக் கொலை வெறியர்களிடம் நீதி கோரினுர்களாம்......இவர்கள ''மக்களின் மீட்பர்கள்''......தண்டனை வழங்கினுர்களாம்......

தோழர் ரேகனின் படுகொலையைக் கண்டித்து வவுனியாவில் பூரண கர்த்தால நடத்தியது, பூவரசங்குளத்தில் இருந்து நெளுக்குளம் வரைக்கும் நீண்ட ஊர்வலம் நடத்தியது, சவக்காலையில் திரண்டு வந்து கண்ணீர் உகுத்தது, அஞ்சலி செலுத்தியது யார்? யார்?

வவுனியாக் காட்டில் வாழும் யானைகளா? கரடிகளா? **புலிகளா?**

யாருக்கு இந்தப் புலுடா? எத்தனை நாளைக்கு இந்த ஏமாற்று? எவ்வளவு காலம் இந்தப் பொறுக்கித்தனமாக அரசியல் பிழைப்பு? துரோகத்தனமான அரசியல் பிழைப்பு நடத்தியவர்களை தூக்கி வீசியதுதான் வரலாற்றின் வரலாறு. இது புலிகளுக்குப் புரிவதற்கு நியாயமில்லை. ஆனல் மக்களுக்கு? மண்டைக்குள் கொஞ்சமேனும் இருப்பவர்களுக்கு.........?

புலிகளே! உங்கள் வெறித்தன அரசியலை நீங்கள் தொடரலாம். யாரையும் கொன்று தீர்க்கலாம். அதைப் புரட்சி என்று கருதலாம், பெருமைப்பட்டுக் கொள்ளலாம்: எமமைப் பற்றியும், எவரைப் பற்றியும் உங்களுக்குப் புரிந்தவாறு பேசலாம், எழுதலாம். பெரிசு, சின்னன் என உங்கள் ஆயுத அளவு கோலில் அளந்து முடிக்கலாம் அதையே ஒரு கூட்டம் நம்பித்தொலைக்கலாம்.

**எழுதுங்கள்..! செய்யுங்கள் .! கொல்லுங்கள்....!**

ஈழப் போராட்ட வரலாற்றில் இரத்தக் கறையைப் படியவைத்த நீங்கள் ஜனநாயகத்தைப்பற்றியே கதைக்கிறீர்கள் என்ருல் எதைப்பற்றிக் கதைக்கமாட்டீர்கள்... கதையுங்கள்.

**ஒருநாள் கொடுமையின் குரல்வளைகள் நெரிக்கப்பட்டு உண்மை வெளிக்கொணரப்படும்.**

''தீரவிசாரித்து தண்டனை வழங்குங்கள்'' மின்கம்பத்தில் கட்டப்பட்டு, தனக்கு முன்ஞல் துப்பாக்கிகளுடன் நின்ற கொலைகாரப் புலிகளிடம் வேட்டுக்கள் தீர்க்குமுன் தோழன் விடுத்த கடைசி வேண்டுகோள் இது. அவர்கள் கொன்று தீர்த்து விட்டனர்.

**தோழா! நமது போராட்டம் ஓயப்போவதில்லை!**

**புதுவழி மீது நமது பயணம் என்றும் தொடரும்!**

**நாங்கள் தோற்பதில்லை!**

---

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (E. P. R. L. F.)**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்